ÉVALUATION DIAGNOSTIQUE DES ÉLÈVES ALLOPHONES

# Compréhension de l'écrit

CYCLE 2

Langue d'origine : tamoul

CANOPÉ

| குடும்பப்பெயர்: | பெயர்: |
|---|---|

**NIVEAU : FIN DE CP**

## 1. பின்வரும் வாக்கியத்தை வாசிக்கவும்







இன்று காலை, ஸேம்மி 7 மணிக்கு எழும்பப் போகிறான். அது அவன் பள்ளிக்குச் செல்லும் முதல் நாள். அவனது அம்மா அவனை மெதுவாக எழுப்புகிறார்.

படுக்கைக்கு அடுத்து ஒரு நாற்காலி உள்ளது. ஸேம்மி எழுந்து உடை மாற்றத் தொடங்குகிறான். அவனுடைய நீல நிற ட்ரவுஸரையும், சிவப்பு நில ஸ்வெட்டரையும் அணிகிறான். அவனுக்குப் பிடித்தமான பச்சை நிறமான, மேலே சிவப்பு நட்சத்திரமுள்ள தொப்பியையும் எடுக்கிறான்.

ஜன்னலுக்கு அடுத்து ஒரு பெரிய தனியறையும் உள்ளது மற்றும் அங்கே சுவர்களில் பூனைகளின் படங்கள் உள்ளன.

| MI | MF | MS | TBM |
|---|---|---|---|

## 2. வார்த்தையை அதற்கான படத்துடன் இணைக்கவும்

| | | |
|---|---|---|
|  | ☐ எழும்புதல் ☐ |  |
| | ☐ படுக்கை ☐ | |
|  | ☐ நாற்காலி ☐ |  |
| | ☐ தொப்பி ☐ | |
|   | ☐ அம்மா ☐ |  |
| | ☐ ட்ரவுசர்கள் ☐ | |
|  | ☐ பையன் ☐ |  |
| | ☐ நட்சத்திரம் ☐ | |
|  | ☐ பூனை ☐ |  |
| | ☐ ஸ்வெட்டர் ☐ | |


MI MF MS TBM

## 3. எப்போது ஸேம்மி எழும்பப் போகிறான்? சரியான பதிலை வட்டமிடவும்.

• ஆறு மணிக்கு • ஏழு மணிக்கு • எட்டு மணிக்கு


MI MF MS TBM

## 4. ஸேம்மியின் பழக்கங்களை வரைந்து சரி வண்ணங்களைச் சேர்க்கவும்



| MI | MF | MS | TBM |
|---|---|---|---|

## 5. ஸேம்மியின் அறையை வட்டமிடவும்.



• படம் 1 • படம் 2 • படம் 3 • படம் 4

| MI | MF | MS | TBM |
|---|---|---|---|

**NIVEAU : FIN DE CE1**

## பின்வரும் வாக்கியத்தை வாசிக்கவும்

"அன்பே, நீ எழும்ப வேண்டிய நேரம், என அவன் அம்மா சொன்னார்கள். நான் சுவையான காலை உணவை செய்துள்ளேன். நான் உனக்காக சமையறையில் காத்திருப்பேன்."

தனியறையின் கண்ணாடியில் ஸேம்மி பார்த்துக் கொண்டிருக்கிறான். மற்றவர்கள் என்ன உடையணியப் போகிறார்கள் என ஆச்சரியமடைந்தான். அவன் நேற்று இரவே நீண்ட நேரம் செலவிட்டு அவனுடைய ஆடைகளைத் தயார்ப்படுத்தி வைத்திருந்தான். தனியறையைத் திறந்து, அவனுடைய கருப்பு ஸ்னீக்கர்களை எடுத்து அவனுடைய கைகளில் ஷூக்களுடன் அறையை விட்டு வெளியேறுகிறான்.

இருண்ட கூடத்திலிருந்து நன்றாக மணம் வீசியது. அவன் சமையலறையில் நுழையும்போது மாவினாலும் முட்டைகளாலும் செய்யப்பட்ட இரண்டு குக்கீகளை அவன் பார்க்கலாம் அவை இன்னும் சூடாக இருக்கின்றன, ஒரு தட்டில் பெரிய சூடான சாக்லேட் கிண்ணம் மற்றும் அன்னாசி, வாழைப்பழங்கள் மற்றும் ஆப்பிள்கள் போன்ற சில சுவையான பழங்கள் இருக்கின்றன.

## கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்

### **6.** ஸேம்மியின் உடைகளை யார் தேர்வு செய்தார்கள்? சரியான பதிலை வட்டமிடவும்.

• ஸேம்மி • ஸேம்மியின் அம்மா • ஸேம்மியின் தம்பி • ஸேம்மியின் அப்பா

| MI | MF | MS | TBM |
|---|---|---|---|

## 7. தட்டில் இல்லாத பழங்களை வெட்டவும்.

• அன்னாசி பழங்கள் • ஸ்ட்ராபெரிகள் • ஆரஞ்சுகள்

• வாழைப்பழங்கள் • ஆப்பிள்கள் • பேரிக்காய்

| MI | MF | MS | TBM |
|---|---|---|---|

## 8. ஸேம்மி அவனுடைய உடைகளைத் தயார் செய்ய சிறிது நேரம் எடுத்துக்கொண்டான். சரியான பதிலை வட்டமிடவும்.

• சரி • தவறு

| MI | MF | MS | TBM |
|---|---|---|---|

## 9. ஸேம்மி அவனுடைய அம்மா செய்த காலை உணவை விரும்பவில்லை. சரியான பதிலை வட்டமிடவும்.

• சரி • தவறு

| MI | MF | MS | TBM |
|---|---|---|---|

## 10. சொற்றொடர்களை அவை தோன்றிவது போல வரிசையாக எண்ணிடவும், முதலிலிருந்து மிக சமீபத்திய நடவடிக்கை வரை.

........................ • ஸேம்மி அவனுடைய அறையை விட்டு வெளியேறுகிறான்

........................ • ஸேம்மி தனியறையை திறக்கிறான்

........................ • ஸேம்மி கண்ணாடி பார்க்கிறான்

........................ • ஸேம்மி அவனுடைய ஆடைகளைத் தயார்ப்படுத்துகிறான்

| MI | MF | MS | TBM |
|---|---|---|---|

**NIVEAU : FIN DE CE2**

## பின்வரும் வாக்கியத்தை வாசிக்கவும்

"அன்பே, சீக்கிரம், நேரமாகிவிட்டது, என அவன் அம்மா சொன்னார். அங்கே நீயே சென்று விடுவாயா? பள்ளிக்குப் போகும் வழியைக் கண்டுபிடித்துவிடுவாயா?

– ஆம், கவலைப்பட வேண்டாம். எனக்கு என்ன நடக்கும் என நினைக்கிறீர்கள்? நான் இதை பழகிக் கொள்ள வேண்டும் ஏனெனில் நான் இதை தினமும் செய்ய வேண்டும்."

அவனுடைய அம்மா ஒன்றும் சொல்லவில்லை ஆனால் கவலை கொண்டார். அவர் அவனைக் கட்டியணைத்து அவருடைய கையை முடிகளுக்கிடையே கொண்டுச் சென்றார். அவர் அதை செய்யும்போது அவனுக்குப் பிடிக்கவில்லை, ஆனால் அவரால் அதை செய்வதை நிறுத்த முடியவில்லை.

ஸேம்மி அவனுடைய பையில் இரண்டு குக்கீகளைப் போட விரும்பினான், ஏனெனில் அவனுக்கு எப்போதும் 10 மணிக்கு பசியெடுக்கும். அவனுடைய புதிய பள்ளியில் அதை அனுமதிப்பார்களா என்று அவனுக்குத் தெரியவில்லை, பின் அதை செய்ய வேண்டாம் என விட்டுவிட்டான்.

பின் அவனுடைய ஸ்னீக்கரைப் போட்டுக்கொண்டு கட்டிடத்தின் படிக்கட்டுகளில் கீழே விரைகிறான்.

"ஸேம்மி! என அவனைப் பிடிக்க கையில் அவனுடைய தொப்பியுடன். உன்னுடைய தொப்பி! உன் தொப்பியை மறந்துவிட்டாய்! என அவன் அம்மா கத்திக்கொண்டே வருகிறார்"

ஸேம்மி தொப்பியை எடுத்துக் கொண்டு கூறுகிறான்:

"எனது பச்சை தொப்பி! இந்தப் பள்ளியில் இது எனது முதல் நாள் மற்றும் எனது அதிர்ஷ்டமான தொப்பியை மறந்தே விட்டேன்!"

## சரியான பதிலை வட்டமிடவும்

**11.** அவனுடைய அம்மா தன்னுடைய கையை முடிகளுக்கிடையே கொண்டுச் சென்றார். அதை ஸேம்மி விரும்பவில்லை.

• சரி • தவறு

| MI | MF | MS | TBM |
|---|---|---|---|

**12.** ஸேம்மி அவனுடைய பையில் சில குக்கீகளை எடுத்திருந்தான்.

• ஆம் • இல்லை

| MI | MF | MS | TBM |
|---|---|---|---|

**13.** ஸேம்மி எங்கே வசிக்கிறான்?

• ஒரு அப்பார்ட்மெண்டில்

• ஒரு கேரவனில்

• ஒரு தனி வீட்டில்

• ஒரு அரண்மனையில்

| MI | MF | MS | TBM |
|---|---|---|---|

## 14. ஸேம்மியின் அம்மா படிக்கட்டில் ஏன் கீழே இறங்கி வந்தார்?

- அவனுக்கு ஒரு முத்தம் கொடுக்க
- அவனுடைய தொப்பியைக் கொடுக்க
- அவன் தலை முடியை சரி செய்ய
- ஏனெனில் அவர் தாமதமாகிவிட்டார்

| MI | MF | MS | TBM |
|---|---|---|---|

## 15. உங்களைப் பொருத்தவரை, ஸேம்மி அவனுடைய தொப்பியை வைத்து கொள்வது அவசியமானது என ஏன் நினைத்தான்?

- தொலைக்காமல் இருப்பதற்கு
- ஏனெனில் அது அவனுக்கு உறுதியளிக்கிறது.
- பள்ளிக்கு விரைவாக செல்வதற்கு
- ஏனெனில் அது பள்ளியின் கடைசி நாள்

| MI | MF | MS | TBM |
|---|---|---|---|

**Rappel des codes de correction :**
**MI** = maîtrise insuffisante **MF** = maîtrise fragile **MS** = maîtrise satisfaisante **TBM** = très bonne maîtrise
**MI et MF :** non acquis **MS et TBM :** on considère que c'est acquis